அ.வ.எண்: 135/2019 நாள்:07.07.2023

வா.சா.1. மும்தாஜ்பேகம்

3 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1) நான் யாரிடம் தாவா சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் ரமேஷ் மற்றும் மற்றொருவர் பெயர் ஞாபகம் இல்லை. எந்த தேதியில் கிரையம் வாங்கினேன் என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 24 செண்ட் ஆகும். தாவா சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் 3 ஆம் பிரதிவாதி ஜகநாதனுக்கு சொந்தமானது ஆகும். 3 ஆம் பிரதிவாதி ஜகநாதனுக்கு எவ்வளவு இடம் சொந்தமானது என்றால் எனக்கு தெரியாது.

2) தாவா சொத்தின் நான்குபுறம் அளவு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. கலியமூர்த்தி மற்றும் ரமேஷ் எப்போது 3 ஆம் பிரதிவாதி ஜகநாதனிடம் தாவா சொத்தை வாங்கினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.